விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி முதல் வேலஞ்சேரி, செல்லாத்தூர் வழியாக நெடியம் தட நீளம் 31 கி.மீ. ஆகும். இத்தடத்தில் திருத்தணி முதல் குருவராஜபேட்டை வழியாக அத்திமாஞ்சேரிப்பேட்டை வரை 22 கி.மீ. தடப்பகுதியில் திருத்தணி பணிமனையிலிருந்து 2 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 30 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், கேட்கப்பட்டுள்ள வழித்தடத்தில் தனியார் பேருந்துமூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் குறிப்பிட்டு கோரிக்கைப் பெறப்பட்டவுடன், புதிய பேருந்துகள் இயக்கப்படும்போது கோரியுள்ள தடத்தில் பேருந்து இயக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

220—

பேருந்து வசதி

வினா எண் 1455—திரு. சு. ரவி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் முதல் பனப்பாக்கம், தக்கோலம் கூட் ரோடு, ஆட்டுப்பாக்கம், கீழ்வெங்கடாபுரம் வழியாக நெமிலி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் முதல் பனப்பாக்கம் வழி தக்கோலம், கூட்டுச் சாலை, ஆட்டுப்பாக்கம், கீழ்வெங்கடாபுரம் தடத்தின் நீளம் 260 கி.மீ. ஆகும். தற்பொழுது அரக்கோணம் முதல் நெமிலி வரை காஞ்சிபுரம் பணிமனை நகரத் தடம் டி.89 மூலம் தினசரி 7 நடைகள் இயக்கப்படுகின்றன. நெமிலி முதல் பனப்பாக்கம் வரையிலான தடத்தில் நகர மற்றும் புறநகர்த் தடங்கள்மூலம் பேருந்து வசதி உள்ளது.

2. தற்போது இயக்கப்படும் நடைகளில் பயணிகளின் பயன்பாடு குறைவாகவே உள்ளது. எனவே, அரக்கோணம்-பனப்பாக்கம் வழி தக்கோலம், கூட்டுச்சாலை, ஆட்டுப்பாக்கம், கீழ்வெங்கடாபுரம் தடத்தில் தற்பொழுது உள்ள பேருந்து வசதியே போதுமெனக் கருதப்படுகிறது.

221—

பேருந்து வசதி

வினா எண் 1752—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செஞ்சி தொகுதி, திருவண்ணாமலை முதல் வேலந்தாங்கல், ஆத்திப்பட்டு, தாயனூர் வழியாக மேல்மலையனூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை முதல் வேலந்தாங்கல், ஆத்திப்பட்டு, தாயனூர் வழியாக மேல்மலையனூர் வரை உள்ள வழித்தடத்தில் பகுதியளவாக அரசு மற்றும் தனியார் பேருந்து வசதிகள் உள்ள நிலையில் திருவண்ணாமலை-மேல்மலையனூர் இடையே நேரடி பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.

222—

பேருந்து வசதி

வினா எண் 1803—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூரிலிருந்து-மதுரை பெரியார் பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருமங்கலம், தே. கல்லுப்பட்டி வழியாக பேரையூர் தடத்தின் தூரம் 47.5 கி.மீ. ஆகும். இத்தடத்தின் தூரம் அரசு உத்தரவுகளின்படி நகரப் பேருந்து இயக்க வரையறை செய்யப்பட்டுள்ள 35 கி.மீ. தூரத்திற்கும் அதிகமாக உள்ளதால், இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

223—

பேருந்து வசதி

வினா எண் 1804—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, வில்லூர் கிராமத்திலிருந்து புளியம்பட்டி, செங்கப்படை, திருமங்கலம் வழியாக மதுரை பெரியார் பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருமங்கலம், செங்கப்படை மற்றும் புளியம்பட்டி வழியாக வில்லூர் தடத்தின் தூரம் 40.0 கி.மீ. ஆகும். இத்தடத்தின் தூரம் அரசு உத்தரவுகளின்படி நகரப் பேருந்து இயக்க வரையறை செய்யப்பட்டுள்ள 35 கி.மீ. தூரத்திற்கும் அதிகமாக உள்ளதால், இத்தடத்தில் நகரப் பேருந்துகள் இயக்க இயலாது.